**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அசல் வழக்கு எண். 89/2024 நாள்– 23.02.2026

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.சு.தனபாக்கியம், Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– ஆ.தங்கமாரியம்மாள்(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 26.05.2023 ம் தேதியிட்ட எனது பெயருள்ள பேரய்யன்பட்டி வருவாய் கிராம பட்டா எண்.1846–ன் கணினி பட்டா – அசல் – **வா.சா.ஆ.1**

2) 09.08.2023 தேதியிட்ட ஷை 1ம் பிரதிவாதியின் பெயருள்ள பேரய்யன்பட்டி வருவாய் கிராம் பட்டா எண்.1889–ன் கணினி பட்டா – நகல் – **வா.சா.ஆ.2**

3) 05.11.2024 தேதியுள்ள 2, 3 பிரதிவாதிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ள பேரய்யன்பட்டி வருவாய் கிராம பட்டா எண்.1890–ன் கணினி பட்டா – நகல் – **வா.சா.ஆ.3**

4) 05.10.2023 தேதியிட்ட பேரய்யன்பட்டி வருவாய் கிராம் புஞ்சை சர்வே எண்.293/7–க்குரிய 01.01.1975 முதல் 04.10.2023 வரையிலான வில்லங்கச்சான்றின் கணினி நகல் – **வா.சா.ஆ.4**

5) எனது ஆதார் அடையாள அட்டையின் – நகல் – **வா.சா.ஆ.5** (அசலுடன் ஒப்பீடு செய்ப்பட்டது).

6) 05.12.2024ம் தேதியிட்ட பேரய்யன்பட்டி வருவாய் கிராமம் புஞ்சை சர்வே எண்.293/7க்குரிய 05.10.2023 முதல் 26.11.2024 வரையிலான வில்லங்கச் சான்றின் கணினி நகல் – **வா.சா.ஆ.6**

7) 09.08.2023ம் தேதியிட்ட ஷை 1, 2, 3 பிரதிவாதிகள் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக புத்தக எண்.1–ல் பதிவு செய்துள்ள கிரைய ஆவணமான 8573/2023க்குரிய கணினி நகல் – **வா.சா.அ.7**

<u>**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1) இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது புஞ்சை நிலத்தை மாற்றிவிட்டார்கள், அதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கினை யார் மீது தொடுத்துள்ளேன் என்றால் ஜோசப் பிரதீப், இந்திராணி மற்றும் ஒருவர் அவர் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. (சாட்சி சில நிமிடங்கள் கழித்து அவர் பெயர் பெத்துராஜ் என்று ஞாபகம் வந்ததாக கூறுகிறார்). சாட்சி தான் படிப்பறிவு இல்லாதவர் என்றும், கையொப்பம் இட தெரியும் என்றும் குறிப்பிடுகிறார். எனக்கு படிக்க தெரியுமா என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்.

2) இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் பட்டாவை பார்த்தால் தான் தெரியும். வழக்கு சொத்தின் மொத்த பரப்பளவு என்ன என்றால் 93 சென்ட் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணமானது என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாவானது 05.08.2023ம் தேதி ரத்து செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் பெயரில் உள்ள பட்டாவின் எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டு 05.08.2023ம் தேதி 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா எண்.1889 என்ற பட்டா மாற்றம் செய்யப்பட்டதை காட்டக்கூடிய ஆவணமாக இந்த வழக்கில் வா.சா.ஆ.2 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) தபசில் சொத்தை பொறுத்து பட்டாவை தவிர வேறு எதாவது ஆவணம் என் பெயரில் உள்ளதா என்றால் என் பெயரில் அடங்கல் உள்ளது. அந்த அடங்கலை நான் வங்கி கடன் பெறுவதற்காக கொடுத்துள்ளேன், நகல் என் வீட்டில் உள்ளது.

மேற்படி ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேலும் தபசில் சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட கிரையம் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அனுபவம் காட்டக்கூடிய வேறு ஏதேனும் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) நான் இந்த வழக்கை 18.12.2024ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது வா.சா.ஆ.1 ஆவணமான பட்டா ரத்து செய்யபட்டுள்ளதா என்றால் ரத்து செய்யப்பட்டுள்ள காரணத்தினால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தபசில் சொத்தை பொறுத்து வா.சா.ஆ.7 ஆவணமான ஒரு கிரையம் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தபசில் சொத்தை பொறுத்து 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவணம் எண்.8573/2023 என்ற பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை 1ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்து மேற்படி ஆவணமானது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.

5) என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணமானது 2, 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். இவ்வழக்கில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், வழக்குமூலம் கிடையாது என்றும், பணம் பறிக்கும் நோக்கோடு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்ககூடியது அல்ல என்றும், வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.